எழும்பூர் தொகுதியின் வெற்றி வேட்பாளர் தமிழ்ன் பிரசன்னாவை ஆதரித்து சேத்துப்பட்டில், கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் செயலாளர் தீபக்நாதன் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார். வேட்பாளர் தமிழன் பிரசன்னா, பகுதிச் செயலாளர் சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை! சுரண்டையில்

தென்காசி கழக வேட்பாளர் மரு.கலை கதிரவனை ஆதரித்து அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வாக்கு சேகரிப்பு!

க.அன்பகம் கலை - பொ.சிவபத்மநாதன் - பழனிநாடார் எம்.எல்.ஏ. முன்னிலை!

தென்காசி.ஏப்.20-

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகு திக்கு உட்பட்ட சுரண்டை

பொட்டல் மாடசாமி கோவில் தெருவில் தென் காசி சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதி ரவனுக்கு வாக்கு சேகரிக் கும் நிகழ்வு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப் பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கழக இணை அமைப்பு செயலாளர் அன் பகம் கலை முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவபத்ம நாதன் தென்காசி சட்ட மன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னி லையில் நடைபெற்றது.நகர பொறுப்பாளர் கணேசன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால் நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பங்கேற்று சுரண்டை பொட்டல் மாட சாமி கோவில் தெருவில் அமைந்துள்ள பெருந்தலை வர் காமராஜர் அவர்களின் முழு திருவுருவசிலைக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினர்.

பின்னர் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ் ணன் பேசியதாவது.

இங்கு வேட்பாளராக நிற்கும் மருத்துவர் கலை கதிரவன்,தந்தை அன்பகம் கலை அவர்கள் கழகத் தலை வர் அவர்களுடன் 50 ஆண்டு காலம் நெருக்கமாக பழகி வருகிறவர் ஆவார். உங்களுக்கு நல்ல வேட்பா ளர் கிடைத்து ள்ளார். அவரை நீங்கள் அதிகமான வாக்கு வித்தி யாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.நான் தொடர்ந்து திருச்செந்தூர் தொகுதியில் 6 முறை வெற்றி பெற்றுள் ளேன்.முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் சாத னைகளை சொல்லிக் கொண்டே போகலாம்.

தற்போது தேர்தல் அறிக் கையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 2000 ம் ஆக உயர்த்தி வழங் கப்படும் என்றும்,ரூபாய் 8000 மதிப்பில் இல்லத்தரசி கூப்பன் வழங்கப்படும் என் றும் அறிவித்துள்ளார் கள்.

உங்கள் வேட்பாளர் கலை கதிரவன் மருத்து வர்,நல்லவர்,எல்லாரிடமும் அன்பாக பழகக் கூடியவர். இங்கே கழகத் தலைவர் முத லமைச்சர் அவர்கள் நிற்ப தாக நினைத்துக் கொண்டு நீங்கள் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் கலை கதிர வனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இது சாதாரண வெற்றி யாக இருக்கக் கூடாது.முழு அளவிலான வாக்குகளை பதிவு செய்ய வேண்டும். ஆகவே நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து அமோகமான வெற்றியை பெற்றுத் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கி றேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ் ணன் பேசினார்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எரித்தது காகிதத்தை அல்ல ! காவிகளின் கருணையற்ற கார்ப்பரேட் ஏகாதிபத்தியத்தை!

சாய்ந்தது சர்வாதிகாரத் தீ ! சரிந் தது சாகச தீ ! மரித்தது அதிகார தீ ! எரிந்தது ஆணவத் தீ ! தோற்றது மத வாதத் தீ ! பாராளுமன்றத்தில் வைக்கப் பட்ட தமிழ்நாட்டின் செங்கோல் உயிர்த்தது !

அம்மையார் இதே பாராளுமன்றத்தில் தமிழ் பிச்சை எடுக்க கூட உதவாது என்றார் ! அறச்சொல் தோற்றது ! தமிழ் வென்றது ! ஒற்றுமையின் பலம் என்ன வென்று பாராளுமன்றத்தில் நிரூபணம் ஆனது !

ராமர் கோவில் கட்டி முடிந்ததும் அதே தொகுதியில் தாமரை தோற்றது ! நேற்று பாராளுமன்றத்தில் காவி தோற்றது ! இனி நாடெங்கும் ஆன்மீக அரசியல் தோற்கும்!

சமயம் வெல்லும் , சம நீதி வெல்லும் , தமிழ்நாட்டு "திராவிட மாடல்" பாரத அரசி யலாக மாறும் ! பெரியாரின் பேரன் தள பதி ஸ்டாலின் அடிக்கல் அமைப்பார். வாழ்க மாநில சுயாட்சி ! வளர்க மத்தியில் கூட்டாட்சி !

வி.சி.குகநாதன்
திரைப்பட
இயக்குநர்

"வடசென்னை வளர்ச்சித் திட்டங்கள் தொடர

எனக்கு மீண்டும் வாய்ப்பளியுங்கள்!"

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப்.20-

துறைமுகம் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் அமைச் சர் பி கே சேகர்பாபு வேட் பாளராக போட்டியிடுகி றார் அவருக்கு திமுக வினரும் கூட்டணி கட்சியி னரும் பொது நல அமைப்பி னரும் பல்வேறு நல சங்கங் கள் மகளிர் அமைப்புகள் தீவிரமாக தேர்தல் பணி செய்து வருகின்றனர் கூட் டணி கட்சித் தலைவர்க ளும் அவருக்கு ஆதரவு திரட்டி வருகிறார்கள் அமைச்சர் பி கே சேகர்பாபு ஒவ்வொரு வீதி வீதியாக நடந்தே சென்று வாக்கு களை சேகரிக்கிறார் அவர் செல்லும் இடங்களில் எல் லாம் அவருக்கு பொதுமக் கள் உற்சாக வரவேற்பு அளித்து உங்களுக்கு கண் டிப்பாக நாங்கள் உதயசூரி யன் சின்னத்தில் வாக்களிக் கிறோம் என உறுதி கூறுகின்றனர்.

56-வது வட்டத்தில் உள்ள அப்பாராவ் கார்டன் பகுதியில் வாக்கு சேகரிக் கும் போது அமைச்சர் பி. கே.சேகர்பாபு பேசியதா வது

வ ட செ ன் னை யி ன் நுழைவாயில் துறைமுகம் தொகுதி வடசென்னை என் றால் ஒரு மாதிரியாக பார்க் கும் ஒரு சூழல் ஒரு காலத் தில் இருந்தது ஆட்டோ கூட வட சென்னைக்கு சில சமயங்களில் வர மறுப்பார் கள் அந்த ஒரு நிலையை மாற்றி திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற சாத னைகள் வட சென்னைக்கு வந்துள்ளது குறிப்பாக வட சென்னை வளர்ச்சி திட்டம் என்ற ஒரு திட்டத்தை திரா விட மாடல் அரசு அறி வித்து ஏராளமான பணிகள் வடசென்னையில் நடை பெற்றுள்ளது தென் சென் னைக்கு நிகராக வட சென்னை இப்போது வளர்ச்சி கண்டுள்ளது தொடர்ந்து வளர்ச்சிப் பணி கள் நடைபெற மீண்டும் எனக்கு வாய்ப்பு தாருங்கள்

40, 50, ஆண்டு பழமை யான மாநகராட்சி பள்ளி களை இடித்துவிட்டு அப் பள்ளி மாணவர்கள் நவீன கல்வி பயில்வதற்காக அனைத்து வசதிகளும் உள் ளடக்கிய வகுப்பறைகள் மற்றும் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் போன்றவை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சுமார் 4500 மாணவர்கள் படிக் கின்ற பாரதி மகளிர் கல்லூ ரிக்கு கூடுதல் கட்டடங்க ளும், ஆய்வு கூடங்களும் கட்டிக் கொடுக்கப்பட்டுள் ளது.

இந்த கல்லூரி ஆசிரியர் கள் மற்றும் மாணவர்கள் கோரிக்கையை ஏற்று புதிய தாக பிரம்மாண்ட கலைய ரங்கம் கட்டுகின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இப்படி அறிவுத் திறனை வளர்க்கின்ற இந்த பணி யின் தொடர்ச்சியாக உலக அரங்கில் எங்கும் இல்லாத வகையில் மாணவ மாணவி யர்கள் போட்டித் தேர்வு களை எளிதாக எதிர்கொள் ளும் வண்ணம் பல்வேறு துறை சார்ந்த புத்தகங்களை உள்ளடக்கிய நூலகங்க ளும், சுயமாக தொழில் செய்பவர்கள் கலந்துரையா டல் கூட்டம் நடத்திக் கொள்ளவும் வேலைக்கு செல்பவர்கள் தங்கள் பணியை வீட்டில் இருந்து பார்ப்பதற்கு போதிய வசதி இல்லாதவர்களுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அனைத்து வசதிக ளும் கொண்ட முதல்வர் படைப்பகம் இன்றைய தினம் துறைமுகம் தொகுதி யில் மூன்று கட்டி முடிக்கப் பட்டு பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. வால்டாக்ஸ் சாலை, பிரகா சம் சாலை பகுதிகளில் இரண்டு முதல்வர் படைப் பகங்கள் கட்டுகின்ற பணியும் நடைபெற்று வரு கிறது.

வால்டாக்ஸ் சாலை , அண்ணா தெருவில் கூடைப்பந்து, கைப்பந்து, கால்பந்து, சிறுவர்கள் விளையாட சிறுவர் விளை யாட்டரங்கம், குத்து சண் டையரங்கம் நடைபயிற்சி வசதி என அனைத்து வசதி களும் அடங்கிய பிரம் மாண்ட விளையாட்ட ரங்கம் கட்டிக் கொடுத்து ள்ளோம்.

பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் தங்கள் இல் லத்தில் நடைபெறும் திரும ணங்களை தனியார் திரு மண மண்டபத்தில் நடத்த வேண்டுமானால் சுமார் 7 லட்சம் 8 லட்சம் என செலவு செய்ய வேண்டிய நிலையை மாற்றி சுமார் 60,000, 70000 ரூபாயிலேயே தங்களுடைய திருமணத்தை நடத்திக் கொள்ளக் கூடிய வகையில் நவீன ஏசி வசதியு டன் கூடிய இரண்டு திரு மண மண்டபங்களை வால் டாக்ஸ் சாலையில் இத்திட்டத்தின் கீழ் கட்டி கொடுத்துள்ளோம்.

மேலும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் பல்வேறு திட்டங்களை இந்த பகுதி யில் கொண்டு வருவதற்காக அனைத்து நடவடிக்கைக ளையும் மேற்கொள்வோம். நிச்சயம் தமிழ்நாட்டின் முதல்வராக எங்கள் ஆரு யிர் அண்ணன் மு.க.ஸாடா லின் அவர்கள் பொறுப் பேற்பார்.

தமிழ்நாட்டின் விடியல் எப்போதும் போல் துறைமு கம் சட்டமன்ற தொகுதி யில் பிரகாசமாக ஒளிரும். வடசென்னை வளர்ச்சி திட் டங்கள் தொடர எனக்கு உதயசூரியனில் வாக்களி யுங்கள் என கேட்டுக் கொண்டார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி. சொக்கலிங்கம்

ஏப்ரல் 20 (2000)

தன் இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே தொடர்பு கொள்ள, பழகுகிற வாய்ப்பும் பெற்றிருந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, மக்கள் பணியாற்றுவதிலும், இந்த இயக்கத்தை வளர்ப்பதிலேயும், கொள்கையைக் காப்பதிலேயும் முன்நின்றவர்.

இவர் காஞ்சிபுரம் மாவட்டக் கழக துணைச் செயலாளராக பணியாற்றியவர்.

மாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1977, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்போரூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்தபோது, உடன் சிறை சென்று 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில்

டாக்டர் இரா.இலட்சுமணன் தீவிர வாக்கு சேகரிப்பு!

இரா.கனகராஜ், இரா.சக்கரை, தமிழ்ச்செல்வி பிரபு பங்கேற்பு!

விழுப்புரம், ஏப்.20-

விழுப்புரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பா ளர், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பா ளர் டாக்டர் இரா.இலட்சு மணன் எம்.எல்.ஏ விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, விழுப்புரம் கிழக்கு நகரம், 40 வது வார்டு, சாலாமேடு மெயின் ரோடு, காமன் கோவில் தெரு, மேட்டுத் தெரு, மீனாட்சி தெரு, மண்டாகுளம், EB காலனி ஆகிய பகுதிக ளில் உதயசூரியன் சின் னத்திற்கு வாக்கு சேக ரித்தார்.

இதில் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பி னர் இரா.ஜனகராஜ், விழுப்புரம் மேற்கு நகர கழக பொறுப்பாளர் இரா.சக்கரை, நகர் மன்ற தலைவர் தமிழ் செல்வி பிரபு மற்றும் கூட்டணி கட்சி மாவட்ட செயலாளர்கள், நகர பொறுப்புக் குழு உறுப்பி னர்கள், வார்டு செயலா ளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி அமைப்பாளர் கள், துணை அமைப்பா ளர்கள், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா.வெ. நாராயணசாமி

ஏப்ரல் 20 (2012)

தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் – திருவொற்றியூர் நகர்மன்றத் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர் "மா.வெ.நா." என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர்.

திருவொற்றியூர் பகுதியிலே உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிற் சங்கத் தலைவராக பல ஆண்டுகாலம் பணியாற்றி, தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக பெரிதும் பாடுபட்டவர்.

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

" மிசா கொடுமைக்கு ஆளான போதிலும், கொண்ட கொள்கையில் உறுதியோடு பணியாற்றியவர் மா.வெ.நா.!" என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.